# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/8 - 2020 ජනවාරි මස 21 වැනි අඟහරුවාදා - 2020.01.21

*2159/8 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

*2019.12.10 ஆந் திகதிய 2153/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களும் பணிகளும் அத்துடன் அதற்குரிய திணைக்களங்களும், நியதிச்சட்ட நிறுவனங்களில் கீழ்வரும் விடயங்களும் பணிகளும் அத்துடன் அதற்குரிய திணைக்களங்களும், நியதிச்சட்ட நிறுவனங்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(5) ஆம் உறுப்புரையினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கௌரவ காணி மற்றும் காணி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க அவர்களுக்கு இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் கையளிக்கப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

எஸ். எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

*காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,*
*பத்தரமுல்லை,*
*2020, சனவரி 20.*


1A - G 31837 — 370 (2020/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. காணி நிர்ணயமும் காணி உரித்துப் பதிவு தொடர்பான பணிகளும் | 1. காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் | • (1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) காணி நிர்ணய கட்டளைச் சட்டம் |
| 2. காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குக் கையளிக்கப்பட்டுள்ள காணிகளை நிர்வகித்தலும் சட்டத்திற்கமைவாக பகிர்ந்தளித்தலும் | 2. காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | • (1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டம் |

*02-28*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.